# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 1268/மா/2016

ஆணை எண். 173/2017

நாள் : 29/06/2017

திரு எம். காளியப்பன்,
வேலம்பாளையம்,
திருப்பூர். – முறையீட்டு மனுதாரர்

மாநகராட்சி ஆணையர்,
திருப்பூர் மாநகராட்சி,
திருப்பூர். – எதிர் மனுதாரர்

திருப்பூர் மாநகராட்சி, 15, வேலம்பாளையம், 48– அண்ணா வீதியைச் சேர்ந்த திரு எம். காளியப்பன் அவர்களது 07.12.2016 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 09.12.2016 அன்று பெறப்பட்டு 1268/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. விசாரணையின்போது மனுதாரர் அளித்த வாக்குமூலம் மற்றும் திருப்பூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

திருப்பூர் மாநகராட்சி, 15, வேலம்பாளையம், 48– அண்ணா வீதியைச் சேர்ந்த திரு எம். காளியப்பன் என்பவர், வேலம்பாளையம் கிராமம், புல எண்.263/2G, தனக்குச் சொந்தமான பட்டா நிலம் என்றும், மேற்குறிப்பிட்ட நிலத்தில் திருப்பூர் (வடக்கு) வட்டாட்சியர், திருப்பூர் மாநகராட்சி ஆணையர், மண்டல உதவி ஆணையர் மற்றும் மாமன்ற உறுப்பினர் ஆகியோர் அத்துமீறி நுழைந்து கழிவுநீர் குழாய்களை பதித்துள்ளனர் எனத் தெரிவித்து சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுப்பதுடன், கழிவு நீர் குழாய்களை அகற்றித் தருமாறும் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் மேற்குறிப்பிட்ட குற்றச் சாட்டு சம்பந்தமாக திருப்பூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. வேலம்பாளையம் கிராமம் புல எண்.263/2F–ல் அமைந்துள்ள மகாலட்சுமி நகருக்கு, வடமேற்கு பகுதியில் உள்ள கிழமேல் தடத்தினை முறையீட்டு மனுதாரர் சாணம் கொட்டியும், கேட் அமைத்து வழித் தடத்தினை தடை செய்ததாக தெரிவித்த புகாரின் அடிப்படையில், மேற்குறிப்பிட்ட இடத்தினை தல ஆய்வு செய்யப்பட்டது என்றும், 50 ஆண்டுகளாக அந்நிலத்தில் உள்ள மாமூல் தடத்தினை அப்பகுதி மக்கள் பயன்படுத்தி வந்துள்ளனர் என விசாரணையில் தெரிய வந்ததாக தெரிவித்துள்ளார். மேலும், பிரச்சினைக்குரிய

தடம் உள்ள நிலததின் புல எண்263/2–G என்றும், 0.08.5 ஏர்ஸ் பரப்பளவுள்ள மேற்குறிப்பிட்ட நிலம் பட்டா எண்.1696–ல் முறையீட்டு மனுதாரர் மற்றும் மூவர் பெயரில் கூட்டுப்பட்டாவாக தாக்கலாகி உள்ளது எனவும், வழித்தடம் என உட்பிரிவு ஆகவில்லை என்றும், அந்நிலத்தில் முறையீட்டு மனுதாரருக்கு ஒன்பதில் ஒன்றரை பங்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்று தெரிவித்து, பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்திவரும் அந்நிலத்தில் சாணம் கொட்டியும், தடத்தினை அடைத்தது முறையற்றது எனவும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனரென்றும், மேலும் வேலம்பாளையம் நகராட்சி நிர்வாகத்தினரால் குடிநீர் குழாய்களும் அத்தடத்தில் பதிக்கப்பட்டுள்ளன எனவும் அவ்வாறாக குடிநீர் குழாய் பதிக்கப்பட்ட இடத்தில் பொதுப்பாதையில் ஒன்பதில் ஒன்றரை பங்கு பாகத்தினை திரு காளியப்பன் அடைத்தது முறையற்றதென பொதுமக்கள் தெரிவித்த புகாரினை கருத்தில் கொண்டும், இதுபோன்று இந்த இடத்திற்கு அருகிலேயே புல எண்.264/2 மற்றும் 264/3A–ல் அமைக்கப்பட்ட வீட்டுமனைப்பிரிவில், பாதையை தடைசெய்ததை "Easement Right" விதிகளின்படி, ஆக்கிரமிப்பினை அகற்ற அப்போதைய கோட்டாட்சியர் 2002–ஆம் ஆண்டில் ஆணையிட்டதையும் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும், பிரச்சினைக்குரிய நிலத்தில் செல்லும் பாதையைப் பொது மக்கள் பயன்படுத்துவதற்கு மற்ற பட்டாதாரர்கள் எந்தவித ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார். இந்நிலையில், முறையீட்டு மனுதாரர் பொதுமக்கள் பயன்படுத்தி வரும் தடத்தினை ஆக்கிரமிப்பு செய்திருந்ததால், காவல்துறை உதவியுடன் 31.07.2013 அன்று ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

3. முறையீட்டு மனுதாரரிடம் 04.04.2017 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. மாநகராட்சி ஆணையர், இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிய அறிக்கையில் உள்ள விவரங்களை மறுத்துள்ளதுடன், அவர் அளித்துள்ள விவரங்கள் அனைத்தும் ஆட்சேபனைக்குரியது, பொய்யானது, உண்மைக்கு புறம்பான தவறான அறிக்கை என விசாரணையின்போது அளித்துள்ள வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மேலும், சம்பந்தப்பட்ட நிலத்தில் பதித்துள்ள குழாய்களை அகற்றித் தருவதுடன் தவறிழைத்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவும் விசாரணையின்போது கேட்டுக் கொண்டார்.

4. முறையீட்டு மனுதாரர் சாணம் கொட்டியும், கேட் அமைத்தும் தடைசெய்த புல எண்.263/2G, முறையீட்டு மனுதாரர் உட்பட நான்கு நபர்கள் பெயரில் கூட்டாக பட்டா தாக்கலாகி உள்ளது. மேற்படி நிலத்தில் செல்லும் தடத்தினை, இந்நிலத்திற்கு அருகில் உள்ள நிலங்களில் ஏற்படுத்தப்பட்ட அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைப்பிரிவில், வீடுகள் கட்டி குடியிருந்து வரும் வெங்கடேஸ்வரா நகர் மற்றும் மகாலட்சுமி நகர் பொது மக்கள் பயன்படுத்திவரும் பொதுப்பாதையாகவும் இருந்து வந்துள்ளது. இப்பாதையில் அப்போதைய வேலம்பாளையம் நகராட்சி நிர்வாகத்தினரும் குடிநீர் குழாய்களை அமைத்துள்ளனர். முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள புல எண்.263/2G–ல் ஒன்பதில் ஒன்றரை பங்கு மட்டுமே அவருக்கு உரிமை பட்டுள்ளது. மேற்படி நிலம் கூட்டுப்பட்டாவாக தாக்கலாகி உள்ள நிலையில் அப்பகுதி மக்கள் அனைவருமே கடந்த 50 ஆண்டுகளாக பயன்படுத்தி வந்துள்ளனர். இந்நிலையில், முறையீட்டு மனுதாரர் மேற்படி நிலத்தில் சாணம் கொட்டியும் கேட் அமைத்து வழித்தடத்தினை தடுத்துள்ளனர். அப்பகுதி மக்கள் முறையிட்டதின்பேரில் மாநகராட்சி அலுவலர்கள் ஆக்கிரமிப்பினை அகற்றி பொதுமக்கள் பயன்படுத்துவதற்கான வசதியினை ஏற்படுத்தியுள்ளனர். மேலும், மேற்படி நிலத்தில் செல்லும் வழித்தடத்தினை பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு மற்ற கூட்டுப்பட்டாதாரர்களுக்கு எந்தவித ஆட்சேபனையும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்நிலையில் ஒன்பதில் ஒன்றரை பங்கு பாத்தியதை பெற்றுள்ள முறையீட்டு மனுதாரர் அந்நிலம் முழுவதையும் ஆக்கிரமித்து பொதுமக்கள் பயன்படுத்துவதை தடைசெய்வது ஏற்புடையதாகாது. மேலும், Easement கீழ்காணும் முறையில் நிகழும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது :-

" **A right of use over the property of another.** Traditionally the permitted kinds of uses were limited, the most important **being rights of way and rights concerning flowing of waters.** The Easement was normally for the benefit of adjoining lands, no matters who the owner was, (an easement appurtenant), rather than for the benefit specific individual(Easement in gross).

Easement frequently arise among owners of adjoining parcels of land. Common examples of easements include the right of a property owner who has no street front to use a particular segment of a neighbor's land to gain access to the road, as well as the right of a Municipal Corporation to run a sewer line across a strip of an owner's land, which is frequently called a right of way. "

மேற்குறிப்பிட்ட விளக்கவுரையின்படி பிரச்சினைக்குரிய புல எண்.263/2G முறையீட்டு மனுதாரர் மற்றும் மூவர் பெயரில் கூட்டுப் பட்டா தாக்கலாகியுள்ளது. அப்பகுதியில் செல்லும் இருசாலைகளை இணைக்கும் வழித்தடமாக சம்பந்தப்பட்ட நிலத்தில் செல்லும் வழித்தடம் அமைந்துள்ளது. மேலும், Easement Right என்பதற்கு அளிக்கப்பட்டுள்ள விளக்கத்தின்படி இந்நிலத்தில் செல்லும் வழித்தடத்தினை ஆக்கிரமிப்பு செய்வதையோ அல்லது மாநகராட்சி சார்பாக கழிவுநீர் குழாய்கள் பதித்ததை அகற்றக் கோரும் முறையீட்டு மனுதாரரின் கோரிக்கையினை ஏற்க இயலாது. எனவே, மாநகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுப்பது குறித்தோ அல்லது அந்நிலத்தில் பதிக்கப்பட்டுள்ள கழிவு நீர் குழாய்களை அகற்றுவது குறித்து பரிசீலிப்பதற்கு எந்தவித முகாந்திரமும் இல்லை எனத் தெரிவித்து முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்து ஆணையிடுகிறது.

2017– ஆம் ஆண்டு, ஜூன் திங்கள், 29–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு. எம். காளியப்பன்,
48, அண்ணா வீதி,
15, வேலம்பாளையம், திருப்பூர்.

2. மாநகராட்சி ஆணையர்,
திருப்பூர் மாநகராட்சி,
திருப்பூர்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்